# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | | |
|---|---|---|
| **Calendar** | : | **Case No.05/2017** |
| **Miscellaneous** | : | |
| **Summary Trial** | : | |
| **Maintenance** | : | |
| **Deposition of witness for prosecution** | : | **P.W.1.வள்ளியம்மாள்** |
| **Husband's Name** | : | ராமர் |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08.12.2021

**மு.வி:**

நான் நல்லதாதநாயக்கன்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள் மற்றும் ஒரு ஆண் மகன் உள்ளார். என்னுடைய மகன் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். எதிரியை எனக்கு தெரியும். அவர் அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக வேலை பார்க்கிறார். எதிரி தான் அதிமுக கட்சியை சேர்ந்தவர் என்றும் ரூபாய் 2 லட்சம் கொடுத்தால் என்னுடைய மகனுக்கு அவர் அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனர் வேலை வாங்கி தருகிறேன் என்றும் என்னிடம் சொன்னார். நான் எனக்கு தெரிந்தவர்களிடம் வட்டிக்கு பணம் வாங்கி 21.11.2014 ஆம் தேதி நான் என்னுடைய வீட்டில் வைத்து எதிரியிடம் ரூபாய் 2 லட்சத்தை கொடுத்தேன். அதன்பிறகு சுமார் 6 மாதங்கள் கழித்து எதிரி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றும் நீ தெரிந்ததை பார் கொடுக்க முடியாது என்றும் நீ எங்கு வேண்டுமானாலும் சென்று பார்த்துக்கொள் என்று என்னிடம் சொன்னார். நான் இது சம்மந்தமாக எழுமலை காவல் நிலையம் சென்று அங்கு நடவடிக்கை எடுக்க சொல்லி புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் மனு அ.சா.ஆ.1. போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தார்கள்.

கு.வி:

புகாரை யார் எழுதினார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஆனால் நான் புகார் மனுவை எழுதவில்லை. எதிரி மதுரையில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எங்கள் தோட்டத்திற்கு பக்கத்து தோட்டம் எதிரியின் தோட்டம் என்றால் சரிதான். எதிரி அதிமுக கட்சியை சேர்ந்தவர் என்று காட்டுவதற்கு கட்சியின் அடையாள அட்டையை காண்பித்தார். அட்டையை என்னிடம் காட்டினார். காலை 11 மணி அளவில் நான் என் வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன். நான் மதுரைக்கு சென்றுள்ளேன்.

எதிரியின் தம்பிக்கு கணபதி என்பவர் மூலம் வேலை வாங்கி தருவதாக எதிரி சொன்னார் என்றால் அவ்வாறு என் மகனிடம் சொன்னார். பணம் கொடுத்ததாக நான் சொல்லும் தேதியில் எதிரி தூத்துக்குடியில் பணியில் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. எதிரி தோட்டத்தில் கம்பு அறுவடை செய்ததில் அதனை விற்று எங்கள் பணத்தை கொடுக்குமாறு எதிரியிடம் சொன்னேன். அப்போது எங்கள் மீது எதிரியின் மனைவி புகார் கொடுத்தார். அதன்பிறகு தான் நான் இந்த புகார் மனுவை கொடுத்தேன் என்றால் சரிதான். மதுரையில் உள்ள குரு தியேட்டர் அருகில் உள்ள கதிரவன் பேக்கரிக்கு சென்றுள்ளேன் என்றால் சரிதான். கதிரவன் பேக்கரியில் வைத்து எதிரியிடம் ரூபாய் 1 லட்சம் கொடுத்தேன் என்றால் சரிதான். அதன்பிறகு 1 லட்சம் ரூபாய் எதிரியின் வீட்டில் வைத்து கொடுத்தேன் என்றால் சரிதான். அப்போது எதிரியின் மனைவி உடன் இருந்தார். எதிரியின் தம்பிக்கு வேலை கிடைத்ததா என்று எனக்கு தெரியாது. என் மகனுக்கு வேலை கிடைக்கவில்லை. மதுரை புதுக்குளம் பணிமனையில் எதிரி திராவிட முன்னேற்ற கழக சங்கத்தில் பொருளாளராக பணிபுரிந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கதிரவன் பேக்கரியில் வைத்து கணபதி என்பவரிடம் ரூபாய் 2 லட்சம் கொடுத்தேன் என்றும் அதில் 80 ஆயிரத்தை மேற்படி கணபதி திருப்பி கொடுத்துவிட்டார் என்றும் இவர் பணிபுரிவதால் மீதி பணம் ரூபாய் 1,20,000/- இவரை மிரட்டி வாங்கிவிடுவோம் என்றும் எதிரி பக்கத்து தோட்டத்துக்காரர் என்பதால் பொய்யாக எதிரி புகார் கொடுத்த பின்பு பழிவாங்குவதற்காக இந்த புகாரை கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கணபதி என்பவர் காவல் நிலையம் வந்து நான் தான் வேலைக்காக பணம் வாங்கியதாகவும் ரூபாய் 80 ஆயிரத்தை திருப்பி கொடுத்ததாகவும் காவல் நிலையத்தில் சொன்னார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொன்னதுபோல் எதிரி அதிமுக கட்சியை சேர்ந்தவர் இல்லை என்றும் நான் சொன்னதுபோல் 21.11.2014 ஆம் தேதி காலை 11 மணி அளவில் என் வீட்டில் வைத்து சாட்சிகள் முன்னிலையில் எதிரியிடம் வேலைக்காக எந்த பணமும் கொடுக்கவில்லை என்று சொன்னாலும் விளைந்த கம்பை அறுத்து போட்டிருக்கும்போது எதிரி மனைவியோடு சண்டைபோட்டு அவர் புகார் கொடுத்ததால் அதன் பிறகு பழிவாங்க வேண்டும் என்ற நோக்கோடு எதிரி மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பணம் கொடுத்த 10 மாதங்கள் கழித்து நான் புகார் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரி எந்த ஒரு தொகையும் என்னிடமோ என் கணவரிடமோ என் மகனின் வேலைக்காக பெறவில்லை என்றால் சரியல்ல.

ம.வி:

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.**

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.05/2017** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W**.2.ராமர் |
| **Father's Name** | : சங்கப்பகவுண்டர் |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08.12.2021

**மு.வி:**

நான் நல்லதாதநாயக்கன்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய மனைவி. எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள் மற்றும் ஒரு ஆண் மகன் உள்ளார். என்னுடைய மகன் 12 ஆம் வகுப்பு படித்துள்ளார். எதிரியை எனக்கு தெரியும். அதிமுக ஆட்சியில் அம்மாவின் ஆட்சி என்றும் எதிரியின் தம்பிக்கு வேலை வாங்கிதரப்போகிறேன் என்றும் அதைப்போலவே எங்களுடைய மகனுக்கும் அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனர் வேலை வாங்கி தருகிறேன் என்று எதிரி எங்களிடம் சொன்னார். 2 ½ லட்சம் ரூபாய் நடத்துனர் வேலை வாங்கி தருவதற்கு வேண்டும் என்றும் தற்போது 2 லட்சம் கொடுங்கள் வேலை கிடைத்த பிறகு 50 ஆயிரம் கொடுங்கள் என்று எங்களிடம் சொன்னார். மேலும் ஒரே இனம் மற்றும் பக்கத்து தோட்டத்துக்காரராக இருப்பதால் பணம் கொடுங்கள் என்று சொன்னார். 2014 ஆம் வருடம் 9வது மாதம் ஒரு நாள் எதிரிக்கு நாங்கள் ரூபாய் 2 லட்சம் எங்களுடைய வீட்டில் வைத்து கொடுத்தோம். சுமார் 6 மாதங்களாக சாக்குபோக்கு சொல்லி வந்தார். பிறகு பணத்தை கம்பு, மக்காசோளம் எடுத்து தருகிறேன் என்று காலம் தாழ்த்தினார். நாங்கள் அவருடைய கம்பு தோட்டத்திற்கு சென்று வேலை செய்யவிடாமல் தடுத்ததாக எங்கள் மீது எழுமலை காவல் நிலையத்தில் புகார் செய்தார். அதன்பிறகு நாங்களும் ரூபாய் 2 லட்சம் வேலை வாங்கி தருவதற்காக கொடுத்து ஏமாந்துவிட்டோம் என்று புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி:

ரூபாய் 2 லட்சம் பணத்தை கடன் வாங்கி தான் கொடுத்தோம். எதிரி மதுரையில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். பணம் கொடுக்கும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் காலை 11 முதல் 12 மணி இருக்கும். பணம் கொடுக்கும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் நானும் என் மனைவி மட்டும் இருந்தோம். என் மகன் இல்லை. எதிரியின் தம்பிக்கு வேலை கிடைத்ததா என்று எனக்கு தெரியாது. பணத்தை கொடுத்தது என் மனைவி தான். என் வீட்டு பக்கத்தில் கடை உள்ளது. அவர்களுக்கு நாங்கள் பணம் கொடுத்தது பற்றி தெரியாது. என் வீட்டின் முன்பு கிழமேல் தெரு செல்கிறது என்றால் சரிதான். என் மனைவி மதுரையில் உள்ள கதிரவன் பேக்கரியில் ரூபாய் 1 லட்சம் ஒரு நபரிடம் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. எங்கள் வீட்டில் வைத்து என் மனைவி ரூபாய் 1 லட்சம் கொடுத்தார். எதிரியின் மனைவி புகார் கொடுத்த காரணத்தினால் தான் என் மனைவி எதிரி மீது புகார் கொடுத்தார் என்றால் சரிதான். நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியில் எதிரி அரசு பணியில் இருந்தார் என்றால் சரியல்ல. பணம் கொடுத்து எவ்வளவு நாட்கள் கழித்து புகார் கொடுத்தோம் என்றால் 2016 ஆம் ஆண்டு புகார் கொடுத்தோம். நானும் காவல் நிலையம் சென்றேன். புகாரை காவல் நிலையத்தில் உள்ள ஒரு நபர் எழுதினார். நான் கையெழுத்து செய்யவில்லை. நான் சான்னதுபோல் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து எதிரியிடம் நானோ எனது மனைவியோ என் மகனுக்கு வேலைக்காக எந்த ஒரு பணமும் கொடுக்கவில்லை என்றும் எதிரி எந்த ஒரு நேரத்திலும் எங்களிடம் என் மகனுக்கு வேலை வாங்கி தருவதாக ஆசை வார்த்தைகள் கூறி நம்பவைத்து ஏமாற்றி பணம் எதுவும் பெறவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி அதிமுக கட்சியை சேர்ந்தவர் என்று சொன்னால் ஆனால் அடையாள அட்டை எதுவும் காண்பிக்கவில்லை. என் மனைவி கணபதியிடம் ரூபாய் 2 லட்சம் பணம்கொடுத்து ரூபாய் 80 ஆயிரம் திரும்ப பெற்றுக்கொண்டார் என்றும் காவல் நிலையம் வந்து கணபதி நான் தான் வேலைக்கு பணம் வாங்கினேன் என்றும் மீதி பணத்தை தான் திருப்பி தந்துவிடுகிறேன் என்றும் கணபதி போலீசாரிடம் சொன்னார் என்றும் எதிரி மனைவி எங்கள் மீது புகார் கொடுத்து எங்களை போலீசார் விசாரணைக்கு அழைத்ததால் எதிரி மீது கோபம் ஏற்பட்டு என் மனைவி கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி:இல்லை.